தமிழ்நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு. பெருஞ்சித்திரனார்

தி. பி. 2024 துலை (நவம்-93) விலை உருபா 1-50 (இதழ் எண்: 166)

இருக்கும் கறுப்புச் சட்டங்களிலேயே மிகக் கொடியது 'தடா'

பழி வாங்குவதற்காகவே 'தடா'வை அரசு பயன்படுத்துகிறது.

ஒரு குற்றமும் செய்யாத பலர் 'தடா'வில் கிடந்து உழல்கின்றனர்!

இக்கால், இந்திய அரசு என்பதும், தமிழக அரசு என்பதும் பச்சைப் பார்ப்பன—முதலாளிய—அரம்பத்தனமான அரசுகள் தாம் என்பது, பலவகையிலும் மெய்ப்பிக்கப்பட்டு வரும் உண்மையாகும்.

இந்திய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்று பேசிப் பேசியே, தங்களுக்கு மாறான, எதிரான கருத்துடையவர்களையெல்லாம், தாங்கள் தங்கள் நலனுக்காகவும், தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவுமே ஆக்கி வைத்துள்ள கொடுமையான கருப்புச் சட்டங்கள்—மக்கள் உரிமைப் பறிப்புச் சட்டங்கள் எனப்பெறும் அரசு எதிர்ப்புச் சட்டம், (BDA), சட்டப் புறம்பான நடவடிக்கைச் சட்டம், தேசிய ஒருங்கிணைப்புப் பாதுகாப்புச் சட்டம்(MISA.) தேசியப் பாதுகாப்புச் சட்டம்(NSA), வன்முறைத் தடுப்புச் சட்டம் என்னும் 'தடா'ச் சட்டம் (TADA—The Terrorist and Distruptive Activities (Prevention Act) முதலிய மக்கள் அடக்குமுறை, ஒடுக்குமுறை, ஒழிப்புமுறைச் சட்டங்கள் வழி, தங்களின் சொகுசான, மதச் சார்புள்ள ஆட்சி அதிகாரங்களுக்கு எதிராகப் பயன் படுத்தி, இந்தியாவையே ஒரு திறந்த வெளிச் சிறைக் கூடமாக ஆக்கி வருகிறார்கள். இச் சட்டங்களைப் பயன்படுத்திப் பல இலக்கக்கணக்கான குமுகாய, அரசியல் போராளிகளையும், கருத்தாளர்களையும் இன்றைக்குக் கடுமையான வெஞ்சிறைக்குள் தள்ளிக் கொடுமைப் படுத்தி வருகிறார்கள்.

அண்மையில், இக்கட்டுரையாசிரியராகிய இவ்விதழ்ச் சிறப்பாசிரியர் 'தடா'ச் சட்டத்தின் கீழ் சிறைப் பிடிக்கப் பெற்றுக் கடந்த 26-1-93 முதல் 26-8-93 வரை ஏழு மாதங்கள் சென்னை நடுவண் சிறையிலடைக்கப் பெற்று, மக்களின், அறிஞர்களின் பல்லாயிரக் கணக்கான வேண்டுகோள்கள், அறிக்கைகள், கன்னியாகுமரி முதல் சென்னை வரை நடத்திய நூற்றுக் கணக்கான கூட்டங்கள், எதிர்ப்பு மாநாடுகள், ஊர்வலங்கள், போராட்டங்களுக்குப் பின்னர், தமிழ் நாட்டின் பார்ப்பன செயலலிதா ஆட்சி, வேறொரு வழியுமின்றிப் பொறுப்பில்—பிணையலில்-விடுதலை செய்துள்ளது.

Scanned with CamScanner

இத்தனைக்கும் இவ்விதழாசிரியர் செய்த வன்முறைச் செயலோ, குற்றமோ ஒன்றுமில்லை என்பதுதான் வியப்பிலும் வியப்பானது.

இவ்வாண்டுத் தொடக்கத்தில் கப்பலிலேயே, இந்தியக் காவல் படையினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டு உயிரிழந்த, தமிழீழப் போராட்டத் தளபதி கிட்டுவின் மறைவிற்கு ஓர் இரங்கல் பேரணி நடத்துவதற்காகத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு.பழ.நெடுமாறன் அவர்களின் சென்னை, மயிலாப்பூர் அலுவலகத்தில் நடந்த கலந்துரையாடல் கூட்டத்தில் கலந்து கொண்டு, அங்கு இயற்றப்பட்ட ஒரு தீர்மானத்தின் செயற்பாட்டு நிலைகள் பற்றிப் பேசினார். இவர். இவருடன் இவர் மகனும். தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை ஒருங்கிணைப்பாளரும் ஆகிய **பொழிலனும்** அக் கூட்டத்தில் கலந்து கொண்டார் என்பது அவர் மேல் உள்ள குற்றச்சாட்டு.

ஆனால், தமிழக அரசு இச் செய்தியைத் தங்களுக்குகந்த காவல் துறையினரைக் கொண்டு தலைமாற்றிப் 'பெருஞ்சித்திரனார்தாம் தம்முடைய இல்லத்தில் அக் கூட்டத்தைச் சிலரைக் கொண்டு நடத்தினார்' என்றும், அக் கூட்டத்தில், 'கிட்டுவைக் கொன்ற தமிழக அரசையும், இந்திய அரசையும் பழிவாங்க வேண்டும் என்று பேசினார்' என்றும், 'அவர் பேசிய சில நாள்களில், விழுப்புரத்தில் உள்ள காந்தி சிலை மேலும், ஆத்தூரிலும் குண்டு வெடிப்பு நிகழ்ச்சிகள் நடந்தன' என்றும், 'இத்தகைய நிகழ்ச்சிகளுக்குக் காரணமாக விருந்த பெருஞ்சித்திரனார்க்கு, திரு, பழ. நெடுமாறனும், பொழிலனும் துணையாக இருந்தனர்' என்றும் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் ஒரு முடிச்சைப் போட்டுத் 'தடா'ச் சட்டத்தின் கீழ் மூவரையும் தளைப்படுத்தியது.

'தடா' என்னும் சட்டம், இப்பொழுது உள்ள கருப்புச் சட்டங்களிலேயே மிகவும் கொடிய சட்டமாகும். தில்லியரசும், மாநில அரசுகளும் தங்களுக்கு வேண்டாதவர்களைப் பழிவாங்குவதற்காகவே இத் 'தடா'ச் சட்டத்தை மிகுதியும் பயன்படுத்தி வருகின்றன. இன்றைய நிலையில் இந்தியாவில் ஏறத்தாழ அறுபத்தையாயிரம் பேர், அறிஞர்கள், வழக்கறிஞர்கள், பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், செய்தியிதழாசிரியர்கள், மக்கள் உரிமையியக்கங்களின் தலைவர்கள் ஆகியோர் இத் 'தடா'ச் சட்டத்தின் கீழ் பல்வேறு மாநிலங்களில் சிறை வைக்கப் பெற்றுள்ளனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரை, இராசீவ் குண்டு வெடிப்பு நிகழ்ச்சியில் தொடர்புள்ளவர்கள், உடந்தையாக இருந்தவர்கள், சான்றுளர்கள் என்றவாறு அரசியல் தலைவர்கள் பலரும், மற்றும் பல்வேறு தமிழின உரிமையியக்கங்களைச் சார்ந்தவர்களும், மக்கள் நலத் தொண்டர்களும், பல நூற்றுக்கணக்கானவர்கள் தளைப்படுத்தப் பெற்றுக் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் சிறைகளில் வாட்டி வதைக்கப்படுகின்றனர். இவர்கள் தவிர, சந்தனக் கடத்தல் வீரப்பனுடன் தொடர்பு கொண்டவர்கள், அவனின் ஆதரவாளர்கள், அவனுக்குப் பல வகையிலும் உதவி செய்வார்கள் என்னும் பெயரில், அப் பகுதிகளில் வாழ்ந்து வந்த ஏழை எளியவர்கள், கூலி உழவர்கள், சிறிய வணிகர்கள், ஆதரவற்றவர்கள், காவல் துறையினரால் திடீர் திடீரெனக் குழு குழுவாகத் தளை செய்யப் பெற்றுப் பல்வேறு கொடுமைகளுக்கும் ஆளாகிச் சென்னை, திருச்சி, மதுரை, சேலம் முதலிய சிறைகளில் வாடி வதங்குகின்றனர். இவ்வகையில் தமிழக அரசு காவல் துறையை முழுவதுமாக நம்பி மிகவும் தவறு செய்து வருகிறது, அல்லது தவறு நிகழ இடங்கொடுத்து வருகிறது, என்றே சொல்ல வேண்டும்.

இவ்விடத்தில் 'தடா'ச் சட்டம் பற்றிய சில கொடுமை நடைமுறைகளை அன்பர்கள் அறிந்து கொள்ளவே வேண்டும்.

'தடா'ச் சட்டம் என்பது 1985-ஆம் ஆண்டு மே.17-இல் தில்லிப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பெற்ற ஒரு கொடுமைச் சட்டமாகும்.

இது தொடக்கத்தில் தில்லி, பஞ்சாப், அரியானா, அசாம், சண்டிகார், இராசத்தான், உத்திரப்பிரதேசம் முதலிய மாநிலங்களில் உள்ள வன்முறையாளர்களை அடக்குவதற்கு மட்டுந்தான் பயன்படுத்தப்படும் என்று உறுதி கூறப் பெற்றது. ஆனால் பின்னர் இது குசராத், ஆந்திரா. அருணசலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், சம்மு, காசுமீர், மகாராட்டிரா, மணிப்பூர், மேற்கு வங்காளம், தமிழ்நாடு, கேரளம், கர்நாடகா முதலிய மாநிலங்களிலும் கடைப்பிடிக்கப் படுவதாயிற்று. தொடக்கத்தில் இது வன்முறையாளர்களை மட்டுந்தான் தளைப் படுத்தப் பயன்படுத்தப்படும் என்று கூறப்பட்டது. ஆனால், பின்னர் இதில், அரசியல் கருத்தாளர்கள், அறிஞர்கள், செய்தியாளர்கள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள், அரசியல் தலைவர்கள், தொழிலாளர் இயக்கத் தலைவர்கள், தொழிலாளர்கள், விலைமாதர்கள், விடுதலைப் போராளிகள், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் ஏழை எளியவர்கள் முதலிய அத்தனைத் துறையினர் மீதும் பாய விடப்பட்டதுடன், அரசியல் பழிவாங்கவும் பயன்படுத்தப் பட்டது.

'தடா' வழக்குகளை உசாவுவதற்குச் சிறப்பு வழக்கு மன்றங்களும், சிறப்பு நடுவர்களும் அமர்த்தப் பெறுகின்றனர்.

'தடா'ச் சிறையாளிகளைக் காவல் துறைப் பாதுகாப்பில் ஓராண்டு வரை வைத்திருக்கலாம். இவர்களுக்குப் பிணையல் கிடைப்பது அரிதினும் அரிது. இவர்கள் சிறையுள் இருக்கும் பொழுது,

இவர்களின் குருதித் தொடர்புள்ள உறவினர்கள் தவிர வேறு எவரும் இவரைப் பார்க்க இசைவு தரப் பெறுர்.

இச் சட்டத்தின் கீழ் இன்னொரு கொடிய நடைமுறை உண்டு. மற்ற பிற சட்டங்களின் கீழ்க் குற்றஞ்சாட்டப் பட்டுத் தளைப்படுத்தப்படுபவர்கள், குற்றவாளிகள் என்று காவல் துறையினரால் மட்டுமே மெய்ப்பிக்கப் படுவார்கள். ஆனுல், இச் சட்டத்தின் கீழ்த் தளைப் படுத்தப் படுபவர்கள் சிறையுள் இருந்து கொண்டு, தங்களைத் தாங்களே குற்றமற்றவர்கள் என்பதை மெய்ப்பிக்க வேண்டும். இந் நிலையில் இவர்களுக்கு எதிரான சான்ருளர்களைப் பற்றியும் இவர்களுக்குத் தெரிவிக்கப் படுவதில்லை. இத்தகையவர்களுக்கு ஆதரவாகத் தப்பித் தவறிச் சான்று கூற வருபவர்களைக் காவலர்கள் விட்டு வைப்பதில்லை. தங்கள் அடக்கு முறைக் கொடுமைகளைக் கொண்டு அச்சான்ருளர்களை மிரட்டியும், கொலை செய்தும், காணமற் போகும்படி அழித்தும் விடுவதுண்டு. சில நிலைகளில், இவர்களுக்காகப் போராட முன் வரும் வழக்கறிஞர்களையும், இரக்கம் காட்டும் நடுவர் (நீதிபதி)களையும் கூட, அதிகாரங்களைக் காட்டிப் பணிய வைக்கவும் திசைதிருப்பவும் செய்து விடுகிருர்கள். இவ்வகையில் நடுவர்கள் சிலரும் கூட இட மாற்றப் படுகிருர்கள்; பதவியிறக்கம் செய்யப் படுகிருர்கள். சிலர் 'தடா'விலும் சிறைப் படுத்தப் பட்டிருக்கிருர்கள் — எனில், இச் சட்டத்தின் கொடுமையை என்னென்பது!

இக் கொடிய சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னர் மக்கள் உரிமைகளுக்காகப் போராடும் இயக்கங்களும் அவற்றின் தலைவர்களும் தங்கள் வாய்களுக்குப் பூட்டுப் போட்டுக் கொண்டனர்; எழுத்தாளர்கள் இவர்களின் பக்கம் தலைவைத்துப் படுக்கவே அஞ்சிக் கிடக்கின்றனர். தாங்கள் தங்கள் மொழி, இன, நாட்டு உரிமைகளைப் பற்றிப் பேசுதற்கும் அறிஞர்கள் பலரும் நடுங்கி அடங்கிக் கிடக்கின்றனர்.

சுருங்கச் சொன்னுல் இந்தியாவின் குடியரசமைப்பு கொடிய வன்முறை அனைத்ததிகார ஆணவ அமைப்பு அரசாக மாறி வருகிறது என்றே கூறுதல் வேண்டும். இவ் வவல நிலைகளுக்கிடையில் ஏற்றுமை, ஒருமைப்பாடு, இந்தியத் தேசியம் பேசி வயிறு வளர்க்கும் குமுகாயப் பகைவர்களும் (சமூக விரோதிகளும்), மக்களைக் கொள்ளையடிக்கும திருடர்களும், கொலைகாரர்களும், முதலாளிகளும், பார்ப்பன இதழாசிரியர்களும், பத்தாம் பசலி அரசியல்காரர்களும், நன்கு பிழைக்கத் தெரிந்த சமயத்திற்குத் தங்கள் மேலடையாளங்களை மாற்றிக் கொள்ளும் பதவிப் பித்தர்களும், பெரும் பெரும் தரகு வணிக முதலாளிகளும் மட்டுமே எல்லா வகையான கறுப்புச் சட்டங்களுக்கும் அவற்றின் கிடுக்கிப் பிடிகளுக்கும் தப்பி உயர்தரமான வாழ்க்கையை நடத்தி வருகின்றனர் என்க.

இவ் விக்கட்டான சூழலில், தமிழர்க்காகவும் இனத்திற்காகவும் தனித்தமிழ் நாட்டுக்காகவும் தொடர்ந்து போராடிவரும் சிறு சிறு இளைஞர் இயக்கங்களும், இதற்குத்தக, தங்களின் போக்குகளை முறைப்படுத்திக் கொண்டு. தங்கள் போராட்ட முனைப்புகளை வெற்றிப் பாதையில் கொண்டு செலுத்துவது மிக இன்றியமையாததாகும். அத்தகைய இயக்கங்களைச் சேர்ந்து இயங்கி, இக்கால் வேறு வேறு களங்களில் வேறு வேறு கொள்கை நிலைகளுடன் வேறு வேறு தலைமைகளைக் கொண்டு இயங்கி நின்று, பல வேறு காரணங்களுக்காகச் சிறைப்பட்டுத் 'தடா'ச் சட்டத்தின் கீழ் பல்வேறு சிறைகளில் நீண்ட நெடிய நாள்களாக அடைபட்டுக் கிடக்கும் தமிழக விடுதலைப் போராட்ட அரிமாக்கள் பலர் உளர்.

அவர்களுள் சென்னை, நடுவண் சிறையில் ஆசிரியர் சிறைப்பட்டிருந்த காலையில் தளைப் பட்டிருந்த போராட்ட மறவர்கள்: 1. கி. ஆறுமுகம் (27) தாராபுரம், 2. அ. சுப்பிரமணியம் (28), கோடியக் காடு, 3. அந்தோனி சிமியோன் ராசு (28), பரமக்குடி. 4. திருநாவுக்கரசு. (28), பழனி, 5. மாரிமுத்து (25) பழனி, 6. த. சண்முகம் (30) மூலனூர், 7. ஜவஹர் அபிப், (28) பழனி, 8. முருகசாமி (29) பழனி, 9. சத்தியமூர்த்தி (28) பழனி, 10. பால்ராஜ் (30) பழனி, 11. பார்த்தசாரதி (28) பழனி. 12. வீரகுமார் உடுமலைப்பேட்டை. 13. செல்ல முத்து. நா. (27) மூலனூர். 14. ஜோதி வெங்கடாசலம் (28) கோடியக் காடு, 15. துரைசாமி (30), உடுமலைப்பேட்டை, 16. கண்ணுச்சாமி, (32) பறம்புக்குடி, 17. அப்துல் கலாம் (24) திருச்சி, 18. வடிவேல் (26) தருமபுரி, 19. ரூபன் (22), இலங்கைத் தமிழர் 20. இராஜா (26) இலங்கை, 21. சிசுபாலன் (33) தரும்புரி, 22. மெய்யிறை, திருச்சி. ஆகியோர் இவர்களுடன் பொழிலும் ஆசிரியரும் சென்று சேர்ந்தனர். அதன் பின்னர் அம்மையப்பன். அருணுச்சலம், (திருச்சி), கோபாலகிருட்டிணன் (திருச்சி) வந்தனர்.

இத்தகையவர்கள் இனிமேல் இணைந்து வலிந்த ஒரு பேரியக்கமாக இயங்கி, இத் தமிழினத்தையும் தமிழ் நாட்டையும் மீட்டெடுத்தாலொழிய, இந்திய அடக்கு முறை அதிகார அரசும். செயலலிதா பார்ப்பனிய அரசும் தமிழினத்தையே அழித்து விடும் ஏதம் உள்ளதை அனைவரும் அறிந்து கொள்ள வேண்டும்.

இவ்வகையில் மீண்டும் ஒரு முறை ஒரு கருத்தை நாம் நினைவில் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். அஃதாவது, தமிழின, தமிழ்நாட்டு மீட்பு முயற்சிகளுக்கு இதுவே இறுதிக் காலம். 'காலமறிந்து இடத்தால் செய்வது' என்பதும் இதுவே. இதைத் தவற விட்டால், இத்தகைய முயற்சிகளை இனி எவரும செய்ய முடியவே முடியாது. அதற்குரிய ஆட்சிகளும் இல்லை; சிந்தனையும் செத்துப் போகும். எச்சரிக்கை!

O

தமிழறிஞர் பெருஞ்சித்திரனார் அவர்களை விடுதலை செய்யச்சொல்லித் தமிழக அரசுக்குத் தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் வேண்டுகோளும் பிற தீர்மானங்களும்!

தமிழகத் தமிழாசிரியர் கழகச் செயற்குழுக் கூட்டம் கடந்த 20-6-93-அன்று சிதம்பரம் நகரில் அதன் தலைவர் புலவர் கி.த.பச்சையப்பன் அவர்கள் தலைமையில் 20-6-93-அன்று நடைபெற்றது. ஒருமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

1. இந்திய அரசியல் சட்டம் பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டங்கூடும் உரிமை ஆகியவற்றை இந்நாட்டுக் குடிமக்கட்கு அளித்துள்ளது. அதன் அடிப்படையில் தமிழ்வளம் பெறவும், தமிழர் நலம் பெறவும், தமிழ் நாடு வலுப் பெறவும் அல்லும் பகலும் அயராது பாடுபட்டுத் தம் கருத்துகளை வெளியிட்டதற்காக மூத்த தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரை 'தடா'வில் சிறைப்படுத்தியிருப்பதைக் கண்டு இச் செயற்குழு துயரத்தை வெளிப்படுத்துவதுடன், உடனடியாக அவரை விடுதலை செய்யுமாறும் தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழறிஞர்கள் அனைவரும் தமிழறிஞர் பெருஞ்சித்திரனாரின் விடுதலைக்கு ஒன்றிணைந்து செயற்படவும் இச் செயற்குழு வேண்டுகோள் விடுக்கிறது.

2. (அ) ஈழ ஏதிலியர்க்கு உதவுவதற்கு விரும்பும் தொண்டு நிறுவனங்கட்குப் போடப்பட்டுள்ள தடையை உடன் நீக்கி, நாடு பெயர்ந்து வந்து நலிவடையும் தமிழ் மக்கட்கு எப்போதும் போல் உதவுவதற்கு வழிவகை செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

2. (ஆ) ஈழ ஏதிலியரை அவர்தம் நாட்டுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கையைக் கைவிட்டு, ஈழச் சிக்கலுக்குத் தீர்வுகண்ட பின்னர் அவர்களை அனுப்புவது சாலச் சிறந்ததாகும். அதுவரை ஈழ ஏதிலியர் தமிழகத்தில் தங்கி வாழ கட்டளை பிறப்பித்து உதவுமாறு தமிழக அரசை வற்புறுத்துகிறது.

3. தமிழ்ப் பல்கலைக்கழகம் இதுவரை தமிழில் வெளியிட்டுள்ள அறிவியல் நூல்களைப் பயன்படுத்தியும், அவ்வத்துறைகளில் தமிழில் நூலியற்றும் திறனாளரைப் பயன்படுத்தியும், வரும் கல்வியாண்டு முதற் கொண்டே மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரி, வேளாண் கல்லூரி, முதுநிலைப் பட்ட வகுப்புகள், போன்றவற்றில் தமிழ் வழிக் கல்வியைத் தொடங்க வேண்டுமெனவும், தமிழ் வழியிற் கற்றவர்க்குப் பணிமுன்னுரிமை தரப் படும் என ஆணை வெளியிடுமாறும் தமிழக அரசைச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

4. உயர்நிலை, மேனிலைப் பள்ளிகளில் மேலும் மேலும் ஆங்கிலம் பயிற்று மொழி வகுப்புகட்கும், பிரிவுகட்கும் அனுமதி வழங்கும் போக்கைத் தமிழகக் கல்விதுறை கைவிட வேண்டும் என வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

5. கல்வித்துறையிலிருந்து வெளிவரும் மடல்கள், அறிக்கைகள், மதிப்பெண் பட்டியல்கள் யாவும் ஆங்கிலத்தில் வருவதை வருத்தத்துடன் செயற்குழு கவனத்தில் கொண்டுள்ளது. எனவே; இனிவரும் நாள்களில் கல்வித்துறைச் செயற்பாடுகள் அனைத்தும் தமிழிலேயே இருத்தல் வேண்டுமெனச் செயற்குழு கேட்டுக் கொள்கிறது.

6. ஆறும் ஊதியக் குழு ஒன்றமைத்துக் காலம் நீட்டாமல் ஊதிய முரண்பாடு ஏற்படா வண்ணம் அனைத்து ஆசிரியர் கழகங்களையும் அரசுப் பணியாளர் அமைப்புகளையும் அழைத்துப் பேசி ஊதிய நிலை பற்றிய முடிவு எடுக்கப்பட வேண்டும் என இச்செயற்குழு கேட்டுக் கொள்கிறது. O

சார உணவுத் திட்டம்!

O தமிழகத்தில் சார(சத்து) உணவுத்திட்டம் 1982-ஆம் ஆண்டு ம.கோ. இராவால் கொண்டு வரப் பெற்றது. பலவகையான ஊழல்களுக் கிடையிலும் இத்திட்டம் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தால் 84 இலக்கம் குழந்தைகள் பயன் பெறுகிறார்கள். சார உணவு நடுவங்கள் 38,474 உள்ளன. இதில் இரண்டேகால் இலக்கம் ஊழியர்கள் பணிபுரிகின்றனர்.

ம.கோ.இரா. காலத்தில் இதற்கென 400 கோடி உருபா செலவிடப் பெற்றது. செயலலிதா இதை 236 கோடியாகக் குறைத்து விட்டார். அதுவன்றி இவர் ஆட்சிக்கு வருமுன் 84 இலக்கம் குழந்தைகள் உணவு உண்டு வந்தனர். இவர் வந்தவுடன் அதை 64 இலக்கம் குழந்தைகளாகக் குறைத்து விட்டார்.

Scanned with CamScanner

தமிழ்நாடு ஓர் அமைதிப் பூங்காவா?... அல்லது ஆரியத்தால் அடிமைச் சூழலில் ஆழ்த்தப் பட்டுள்ளதா?

க. கண்ணன். அறி.இ. காடிப்பட்டி.

தமிழ் நாட்டு மக்களே! இளைஞர்களே! இளைஞைகளே! நாம் அடிமைத் துயிலில் ஆழ்ந்திருப்பதால், நம் தமிழின எதிரிகளும், இரண்டகர்களும், தமிழ்நாட்டை 'அமைதிப் பூங்கா' என்று அழைக்கின்றனர். தமிழர்கள் பொறுமையானவர்கள் — என்று பூரித்துப் போகின்றனர்; புதுப் பெயர் சூட்டுகின்றனர்.

பார்ப்பனியமும் முதலாளியமும் நம்மை இன்றுவரை படுகுழியில் தள்ளியுள்ள வரலாற்றை நாம் அறிவோமா?

"வட வேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகம்" — என்று நம் முன்னோர் தெளிவாக எல்லை வகுத்திருந்தும், 'பாரதம்' என்றும் 'இந்தியா' என்றும் 'திராவிடம்' என்றும் நம் தமிழ் முகவரியைத் தொலைத்தவர்கள், தமிழ் எல்லையை இழந்தவர்கள், நாம்!

"முல்லையும் குறிஞ்சியும் முறைமையில் திரிந்து பாலை என்பதோர் படிவம் கொள்ளும்" — என்று தமிழ்நாடு பின்னால் மாறப் போவதை எண்ணித் தான் அன்றே தொல்காப்பியன், இலக்கணமு வகுத்தான் போலும்!

பச்சைப் பட்டாடையணிந்த பசுஞ்சோலைகளும், நீண்டுயர்ந்த நெடிய மரங்களும் அழிக்கப் பட்டதால், தெற்கிலிருந்து வரும் தென்றல் காற்று — இன்று நம்மைத் தணலாய்ச் சுடுகின்றது; நம் எதிர்கால வாழ்வை எண்ணத் தூண்டுகிறது.

ஏரிகளும் குளங்களும் மண்மேடிட்டுப் புதர் மண்டிக் கிடக்கின்றன; புன்செய் காடுகளாய் மாறுகின்றன; உழவன் வானத்தைப் பார்த்து பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறான்; விளக்கம் கிடைக்காமல் குழம்பி நிற்கின்றான்.

இந்தத் தமிழ் நாட்டிற்குப் பெயர்தான் அமைதிப் பூங்காவா?

வேலைக் கிடைக்காத தொழிலாளி வேட்டை நாயைப் போல் அலைந்து திரிகின்றான்! வேலை கிடைத்த தொழிலாளியோ வேலை எப்பொழுது பறிபோகும் என்று செத்துக் கொண்டிருக்கின்றான்!

இதற்குப் பெயர்தான் அமைதிப் பூங்காவா?

பஞ்சுவிலை குறையும்; ஆனால் நூல் விலை ஏறும்; நெசவுத் துணி விலை குறையும்; ஆனால் வணிகன் கை மாறினால் விலை ஏறும்! நினைத்துப் பார்க்க முடியாத வறுமையில் நெசவாளி தவிக்கின்றான்!

இந்தத் தமிழ்நாட்டிற்குப் பெயர்தான் அமைதிப் பூங்காவா?

ஈழத் தமிழனின் செவ்வரத்தம் கடலில் கலந்து — நம் கரையைத் தொடுகிறது; அவர்களின் கண்ணீர்க் கதையைக் கதைக்கின்றது. இந்தியப் படையாலும் சிங்களப்படையாலும் சிதைக்கப் படுகின்றான்; செத்துக் கொண்டிருக்கின்றான், நம் தமிழ்நாட்டு மீனவன்!

இந்தத் தமிழ்நாட்டிற்குப் பெயர்தான் அமைதிப் பூங்காவா?

பள்ளி மாணவரும் மாணவியரும் பொதி மாடுகளைப்போல் பொத்தக மூட்டையைச் சுமக்கின்றனர். கல்லூரிக் காளையரும் கன்னியரும் கனவுலகில் மிதக்க விடப்பட்டுள்ளனர். பட்டங்களை ஏந்திக் கொண்டு என்ன படித்தோம்? எதற்குப் படித்தோம்? யாருக்காகப் படித்தோம்? — என்று தெரியாமல் திரிகின்றனர்!

இதற்குப் பெயர்தான் அமைதிப் பூங்காவா?

இருபத்து நான்கு மணி நேரமும் திரைப்படம் பார்க்கலாம்; விளையாட்டுப் பார்க்கலாம்.. வேலை செய்ய வேண்டியதில்லை; உண்ண வேண்டியதில்லை; உறங்கவேண்டியதில்லை — தமிழ்நாட்டின் நகரங்கள் இந்தத் திசையில் நகர்ந்து கொண்டுள்ளன.

இந்தத் தமிழ்நாட்டிற்குப் பெயர்தான் அமைதிப் பூங்காவா?

"ஞாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்
செம்புலப் பெயல்நீர் போல
அன்புடை நெஞ்சந் தாங்கலந்தனவே" —

என்பது அன்றைய தமிழ்நாட்டின் காதலர் நிலை.

"ஞாயும் ஞாயும் எந்தச் சாதி
எந்தையும் நுந்தையும் எந்த வகுப்பு(வர்க்கம்)?
செம்பொன் எடையில் சிறிது குறைந்தாலும்,
அன்புடை நெஞ்சம் தீயில் வெந்தனவே" —

என்பது இன்றைய தமிழ்நாட்டுக் காதலர் நிலை.

கற்புக்கரசி கண்ணகிக்கும் தமிழகத்தில் கோயில். ஐந்து பேருக்கும் மனைவியாகிய துரோபதைக்கும் கோயில்! இயற்கையை வணங்கிய அன்றைய தமிழன் இன்று தடுக்கி விழுந்தால் கோயிலில்தான் விழ வேண்டும்! 'கலை' என்னும் பெயரில் கழிகாமக் காட்சிகள்! 'இலக்கியம்' என்னும் பெயரில் இழிவான படைப்புகள்!

(தொடர்ச்சி 11- ஆம் பக்கம்

உதம்சிங் வரலாறு!

தஞ்சை நலங்கிள்ளி, அமெரிக்கா.

தங்கை: சாலியன் வாலாபாக் படுகொலையைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறாயா, அக்கா?

அக்கா: ஆமாம். நான் பள்ளியில் படித்திருக்கிறேன். 1919-இல் நடந்தது. அப்போது இந்தியத் துணைக் கண்டம் ஆங்கிலேயனுக்கு அடிமைப் பட்டுக்கிடந்த காலம். இந்தியர் ஆங்கிலேய அடிமைத் தளையை அறுத்தெறிந்து விடுதலை பெற்ற நாட்டையமைக்க வேண்டும் என்று விரும்பிய காலம். பஞ்சாபிலுள்ள சாலியன் வாலாபாக் எனுமிடத்தில் இந்திய விடுதலை பற்றிய பெரிய பொதுக் கூட்டமொன்று நடக்கவிருந்தது. பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநரான (governor) ஒடயருக்கு இப்படியொரு பொதுக்கூட்டம் நடப்பது பொறுக்கவில்லை. (அவர் ஓர் ஆங்கிலேயர்) காவற் படையை அனுப்பி அப் பொதுக்கூட்டத்தைக் கலைக்கும்படி கட்டளையிட்டார். காவற்படை பொதுக் கூட்டத்திற்கு வந்திருந்த மக்கள் மீது வேட்டுச் சூடு (துப்பாக்கிச் சூடு) நடத்தியது. பலர் மாண்டனர். இந்த நிகழ்ச்சியைத்தான் 'சாலியன் வாலாபாக் படுகொலை' என்று வரலாற்றாசிரியர் சிலர் குறிப்பிடுகிறார்கள்.

தங்கை: அந்த ஆங்கிலேய ஆளுநன் ஒடயர் எவ்வளவு கொடியவன்! கேடு கெட்டவன்!

அக்கா: அந்தக் கொடியவன் சில ஆண்டுகளுக்குப் பின் பஞ்சாப் மாநில ஆளுநன் பதவியிலிருந்து ஓய்வு பெற்றுத் தன் தாய்நாடான இங்கிலாந்துக்குச் சென்று, தன் குடும்பத்துடன் நலமாக வாழ்ந்து வந்தான்.

தங்கை: அத்தனைப் பேரின் படுகொலைக்குக் காரணமான அவன் மீது எனக்கு மிகக் கோபம் வருகிறது.

அக்கா: உன்னைப் போலவே இந்தியத்துணைக் கண்டத்தார் பலருக்கும் அவன் மீது கோபமாகத் தான் இருந்தது. அவனால் தந்தையை இழந்தார் எத்தனைப்பேர்! கணவனை இழந்தார் எத்தனைப்பேர்! மகனை இழந்தார் எத்தனைப்பேர்! ஆனால் இந்தியத் துணைக் கண்டத்தவர்கள் என்ன செய்ய முடியும்? ஆங்கில அரசிடம் மிகப்பெரிய, வலிமையான படையிருந்தது. இந்தியர் உள்ளம் குமுறினாலும், ஒன்றும் செய்ய முடியவில்லை. உதம்சிங் (Udham Singh) என்ற இந்தியருக்கோ உள்ளம் கொதித்தது. சாலியன் வாலாபாக் படுகொலைக்குக் காரணமான ஒடயரைக் கொன்றுவிடத் திட்டமிட்டுத் தக்க நேரத்துக்காகக் காத்திருந்தார். இங்கிலாந்துக்குச் சென்றார். ஒடயரைத் தேடிக் கண்டுபிடித்து 1940-இல் அவனைச் சுட்டுக் கொன்றார்.

தங்கை: எண்ணியக் கருமத்தைத் திண்ணியமாக முடித்த இந்த உதம்சிங் பெரிய வீரராயிருப்பார் போலிருக்கிறதே?

அக்கா: ஆங்கிலேய அரசு அவரை விடுதலை வீரராகக் கருதவில்லை. ஒரு வன்செயல்காரன் — வன்செயலாளன் — பயங்கரவாதி (terrorist) எனக் கருதியது. அவர் மீது கொலைக் குற்றம் சாட்டியது. ஆங்கிலேய அறமன்றம் அவர் கொலைக் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கியது. 1940-இல் உதம்சிங் தூக்கிலிடப்பட்டார்.

தங்கை: அப்படியானால் இந்த உதம்சிங் வன்செயல்காரன் (பயங்கரவாதி, terrorist) தானோ?

அக்கா: ஆங்கிலேய அரசின் கண்களுக்கு வன்செயல்காரராக அவர் காணப்பட்டாலும், ஆங்கிலேயன் இந்தியத் துணைக் கண்டத்தினின்று வெளியேறியபின் அமைக்கப்பட்ட இந்திய அரசு உதம்சிங்கை விடுதலை வீரராகக் கருதியது.

தங்கை: ஓ! அப்படியா?

அக்கா: ஆமாம்! 1974-இல் இந்திய அரசு உதம்சிங்கின் எலும்புகளை இங்கிலாந்திலிருந்து புது தில்லிக்குக் கொண்டு வந்தது. அந்நாளைய தலைமையமைச்சர் இந்திராகாந்தி உதம்சிங்கின் எலும்புகளைப் பெருமதிப்புடன் வரவேற்று, உதம்சிங்கைப் பெரிய விடுதலை வீரர் என்வும், ஈகி (தியாகி) என்வும் புகழ்ந்து பாராட்டினர்.

தங்கை: சாலியன் வாலாபாக்கில் பலர் கொல்லப் படக் காரணமாயிருந்த ஆங்கிலேய ஆளுநன் ஒடயரைக் கொன்ற உதம்சிங்கை ஆங்கிலேய அரசு வன்செயல்காரர் என்கிறது. ஆனால் இந்திய அரசு அவரை விடுதலை வீரர் என்கிறது. அப்படியா?

அக்கா: ஆமாம், தங்காய்.

தங்கை: அப்படியென்றால் உதம்சிங்கும் அவரைப் போன்ற விடுதலை வீரர்களும் வாழ்க! அவர் தம் பெயர் என்றென்றும் நிலைத்து நிற்க! O

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின்

ஓ! ஓ! தமிழர்களே!

கடந்த 17-2-91-இல் ஈரோட்டில் நடந்த உ.த.மு.க. இரண்டாவது மாநாட்டில் ஆசிரியர் செய்த அரிய சிறப்புச் சொற்பொழிவு நூல்!

வெள்ளைத்தாள் பதிப்பு : 9-00

செய்தியச்சுத்தாள் பதிப்பு: 6-50

நூல் அஞ்சல் செலவு: 3-00

ஆசிரியர், தென்மொழி, சென்னை-5

கர்நாடகம் என்றும் வளையாது; காவிரிச் சிக்கலும் தொலையாது!

—அதியமான்

காவிரியாறு குடகு மலையில் உருவாகிக் கர்நாடக வழி, தமிழ் நாட்டில் பாய்ந்து, கிழக்கே வங்கக் கடலில் கலக்கிறது. இந்த ஆறு வரலாற்றுப் பெருமையுடையது. தமிழ் மக்கள் இந்த ஆற்றைக் காவிரித்தாய் என்று புகழ்ந்து வணங்குவர். அத்தனைப் பெருமைகளையும் உள்ளடக்கியது, தஞ்சையை நெற்களஞ்சியமெனப் புகழக் காரணிய ஆறு. இந்த ஆற்று நீரைத் தமிழகத்திற்கு வரவிடாமல் குடகுக்கும் தமிழகத்திற்கும் இடையிலிருக்கும் கர்நாடகம், இடைமறித்துச் சண்டிப் பேச்சுகளைப் பேசிக் கொண்டு தமிழகத்தை வறண்ட பாலை நிலமாக்கிச் சிரித்து விளையாடிக் கொண்டிருக்கிறது.

இவ்விளையாட்டிற்கு நடுவண் தில்லி அரசு சிலவேளைகளில் தமிழ்நாட்டுக்கு ஏற்றவாறும், மறுவேளையில் கர்நாடகத்துக்கு ஏற்றவாறும், பேசிக் கர்நாடகத்திற்கு ஒத்தாதித் தாளம் போட்டுக் கொண்டிருக்கிறது.

ஒத்தாதித் தாளம் போடும் நடுவணரசை நாம் ஏன் எதிர்பார்க்க வேண்டும் எனக் கேட்கலாம். இந்தியக் குடியரசு நாட்டில், தமிழகம் ஒட்டித் தொங்கிக் கொண்டிருக்கிறது. அக்குடியரசின் சட்டமே தமிழகத்தையும் ஆளுகிறது. அச்சட்ட எண் 262 (பிரிவு 2)இல், "மாநிலங்களிடையே ஓடும் ஆறுகளின் தண்ணீரைக் கட்டுப்படுத்துவது; பங்கிட்டுக் கொடுப்பது, அதனால் ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டியது நடுவணரசே" என்றிருப்பதால், தமிழர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. கர்நாடகத்தைத் தாங்கு தாங்கென்று ஏறத்தாழ 20 ஆண்டுகளாகத் தொங்கிக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்தியக் குடியரசுச் சட்டத்தின் கீழ் இயங்கும் தமிழக அரசியற் கட்சிகள் தில்லிக்குச் செல்வதும், அங்கு திருப்பதி மொட்டை போல மொட்டை அடிக்கப்பட்டு இங்கு வந்து ஒருவர் மீது ஒருவர் குறை கூறி மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டு இரு பூனைகளுக்குக் கிடைத்த அப்பத்தைக் குரங்கிடம் கொடுத்து எப்போது பங்கிடும் என்று ஏங்கி, வாயை மெச்சட்டம் போட்டுக் கொண்டு இரு மாநிலங்களும் காத்துக் கொண்டிருக்கின்றன. குரங்கோ அப்பத்தைக் காக்கை தூக்கிக் கொண்டு ஓடிபோய் விட்டது எனக் கூறி பொறு, தருகிறேன் என் உச்சநெறி மன்றத்(சுப்ரீம் கோர்ட்)தைக் காட்டி ஏமாற்றிக் கொண்டிருக்கிறது.

கன்னடியர்களோ நடுவணரசை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள். 'காவிரி நீரைப் பற்றிப் பேசினால், இந்தியக் குடியரசிலிருந்து கர்நாடகம் தன்னாட்சி உரிமைகோரும் நிலைகூட ஏற்படலாமென பா. ச. கட்சியைச் சேர்ந்த கே. வேங்கடகிரி மிரட்டிக் கொண்டிருக்கிறார். இதைப் போலவே தமிழகத்தவரும் கூறுகிறார்கள். ஆனால் கர்நாடகர் நினைத்தால் தன்னாட்சியைக் கேட்பர். போராட்டமும் செய்வர். ஏனென்றால் அங்குள்ள அரசியற் கட்சிகளனைத்தும் ஒன்றிணைந்து இச் சிக்கலைப் பேசுகின்றன. அதனால் நடுவணரசுக்கும் அச்சம். தமிழகத்தில் பேசுவோர்களே தவிர தன்னாட்சிக்காகப் போரிட யாருமில்லை என்பது தில்லிக் குடியரசுக்கு நன்கு தெரியும். அதனால் 'பெறு மனமே, பெற்று' என்று தமிழர்களுக்கு உச்சியில் பனிக்கட்டியை வைத்து அழுத்திக் கொண்டிருக்கிறது.

தமிழர்கள் 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்று வானத்தைப் பார்ப்பதும் காவிரி ஆற்றை நோக்குவதுமாக இருக்கிறார். அத்துடன் "சோழ நாட்டில் கரிகால் பெருவளத்தான் என்ற மன்னன் இருந்தான்; அவன் என்ன செய்தான் தெரியுமா? காவிரி காடு மேடாக அலைந்தது; உடனே நம் சோழ மன்னன் காவிரிக்குக் கரை கட்டினான்; கல்லணையையும் கட்டினான்" என்று இங்கு வீரம் பேசிப் பேருந்துகளை ஓடவிடாமலும், கடைகளைத் திறக்க விடாமலும், உண்ணா நோன்பு இருப்பதும், முதலமைச்சர் உண்ணா நோன்பு இருந்ததற்காக சிலர் உயிரை விடுவதுமாகக் கூச்சல் குழப்பத்தை உண்டாக்கி மக்களுக்கு அரசியல் கட்சிகள் தொல்லைகளைக் கொடுத்துக் கொண்டிருக்கின்றன. கர்நாடகர் தண்ணீர் விடாமைக்கு இங்கு மக்களுக்குத் தொல்லைகளைக் கொடுத்தால் பயனென்ன? இதனால் கன்னடியர்களுக்கு இழப்புகள் ஒன்றுமில்லை. நமக்கு ஏற்படும் இழப்புகளை எண்ணிப் பார்க்காமல் அரசு வெற்றி விழா கொண்டாடுகிறது. இவ்வகைப் போராட்டங்களால் காவிரியில் தண்ணீரும் வரவில்லை, தண்ணீரைத் தஞ்சை உழவர்களுக்குக் கிடைக்காமல் போக, நடுவணரசால் பண ஒதுக்கீடு செய்யாமலும் இசைவு பெறாமலும், தமிழகத்தின் விருப்பத்தைக் கேட்காமலும் கர்நாடகம் கபினி, கேமாவதி, கரங்கி ஆகிய மூன்று அணைகளைக் கட்டித் தண்ணீரைக் காவிரியில் ஓடவிடாதபடி தேக்கிக் கொண்டது. காவிரி நீர் பாய்ந்த நிலப்பயிர்கள் கருகித் தீய்ந்து போயின.

பல முறை கர்நாடகமும் தமிழகமும் பேச்சு நடத்தியதில் ஞாயம் கிடைக்காததால் தமிழ் நாட்டரசு 1990-இல் (தி.மு.க. ஆட்சி) காவிரிச் சிக்கலை இனி நடுவர் மன்றம்(Tribunal) அமைத்தே ஞாயம்

Scanned with CamScanner

கேட்க முடிவு எடுத்தது. அதன்படி அப்போதைய தமிழகப் பொதுப்பணித்துறை அமைச்சரான துரைமுருகன் அவர்களுடைய தலைமையில் அனைத்து அரசியற் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் தில்லிக்குச் சென்று தலைமையமைச்சரிடம் முறையிடப் புறப்பட்டார்கள். இக்குழுவுடன் இந்திரா பேராயக் கட்சியின் உறுப்பினர்கள் போக மறுத்துவிட்டனர். ஆனால் அக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வைசயந்திமாலா மட்டும் அக்குழுவோடு சென்றார். அதற்காகத் தமிழ்நாட்டு இ.பேராயக் கட்சியினர் அவர் மீது நடவடிக்கை எடுக்க இராசீவ்காந்திக்குப் பரிந்துரை செய்தனர். இது எதைக் காட்டுகிறது என்பதை மக்கள் புரிந்தாக வேண்டும். வடநாட்டுப் பார்ப்பனத் தலைமைக்கு இங்குள்ள இ.பேராயினர் அஞ்சி அடிமைகளாக வாழ்கின்றனர். இப்போது கர்நாடகத்தில் இந்திராப் பேராயக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களே அங்கு இ.பே.கட்சி ஆளும் நடுவணரசை எதிர்க்கிறார்கள். இவ்விரு மாநிலத்தவர்களில் கர்நாடகரே நாட்டுப் பற்று மிக்கவர். பதவி வளத்தைவிட நாடே முகாமை என்பதை உலகுக்குக் காட்டுகிறார்கள்.

துரைமுருகன் தலைமையிலான குழுவிடமிருந்து வேண்டுகையைப் பெற்று நன்கு படித்து ஞாயம் காணத் தமிழ் நாட்டரசு வேண்டும் வழியே சிறந்ததெனத் தெளிவு கண்ட அப்போதைய இந்தியாவின் தலைமையமைச்சர் வி.பி.சிங் அவர்கள் காவிரிச் சிக்கலைத் தீர்க்க நடுவர் மன்றம் அமைக்கப்படும் என அறிவித்து ஏற்பாடுகளையும் செய்தார்.

ஒன்றை மறந்துவிட வேண்டாம். இந்த நடுவர் மன்றத்தை அமைக்க ஆணைபிறப்பித்தது இந்தநாட்டின் உச்ச நெறி மன்றம்(சுப்ரீம் கோர்ட்). இந்திய அரசியல் சட்டம் 129-இன்படி அம்மன்றம் ஒரு மதிப்புடையது. ஞாய மன்றத்தின் அதிகாரம் முழுவதும் அதற்குண்டு. அம்மன்றத்தை அவமானம் செய்வோரைத் தானே தண்டிப்பதற்கும் அதற்கு அதிகாரம் இருக்கிறது. அத்தகைய அறம் மன்றத்தைத்தான் அமைத்தது. அதில் நடுவர்கள் சிட்டாதோசு முகர்சி, அகர்வால், எசு.எசு.இராவ் ஆகியவர் இருந்தனர். இக்குழு தமிழ்நாடு, கர்நாடகம ஆகிய இரு மாநிலங்களின் உழவர்களைச் சந்தித்துக் கருத்தறிந்ததுடன், காவிரி பாய்ந்து விளை நிலங்களாக்கி இப்பொழுது வறண்டிருக்கும் அனைத்துப் பகுதிகளையும் நன்கு பார்வையிட்டது. மக்களுடைய நிலைகளையும் நுணுக்கமாக அவர்களுடன் பேசிக் கருத்தறிந்து ஆய்ந்து பார்த்தது.

அக்குழுவினர் இங்குக் கண்ணீரைக் கண்டனர்; அங்குத் தண்ணீரைக் கண்டனர். இங்கு வறுமையைப் பார்த்தனர்: அங்கு பெருமையைப் பார்த்தனர். இங்கு உழவர்களைச் சந்தித்தனர். அங்கு அரசியலாளரைச் சந்தித்தனர். இங்கு குலைவாடிய பயிர்களிருந்ததையும், அங்கு முற்றிச் சாய்ந்திருந்த விளைப்பினையும் கண்டனர். நன்கு சிந்தித்தனர். நடுநிலைமையோடு ஞாயம் வழங்க முன் வந்தனர். அக் குழுவினர் "கர்நாடகம் தமிழ் நாட்டிற்கு 250 டி.எம்.சி. தண்ணீரை விட வேண்டும்" என்று தீர்ப்பு வழங்கினர்.

இதை நடுவணரசின் தலைமையமைச்சர் நரசிம்மராவ் தமிழ்நாட்டரசின் வேண்டுகோளையும், உச்சநெறி மன்றத்தின் ஆணையையும் மதித்தும் அரசிதழில் அவ்வுத்தரவை வெளியிட்டார். கர்நாடக அரசின் முதலமைச்சர் பங்காரப்பா (அப்போதைய முதல்வர்) இதையெதிர்த்துப் பெரிய முற்றடைப்பை(பந்த்) முன் நின்று நடத்தினார். உடனே கர்நாடகத் தமிழர்களைக் கன்னடியர்கள் அடித்து அங்கிருந்து விரட்டத் தொடங்கினர். தமிழர்களைப் பிடித்து மொட்டையடித்துத் தெருவழியாக நடத்தி இழிவுபடுத்தினர். ஏறத்தாழ 17,700 தமிழர்கள் உயிர் விட அஞ்சித் தமிழ் நாட்டிற்கு ஏதிலிகளாக (அகதிகளாக) வந்தனர். ஒருமைப் பாட்டு இந்தியாவிலேயே ஒரு மாநில மக்கள் ஏதிலிகளாக அலைய நேர்ந்தது. இந்த ஒருமைக்கு வாழப்பாடி இராமமூர்த்திதான் விளக்கம் கூற வேண்டும், கர்நாடக உள்துறை அமைச்சர் தரம்சிங் என்பவர் கர்நாடகத் தமிழர்கள் பொங்கல் விழா கொண்டாடுவதற்குத் தமிழகம் சென்றுள்ளனர் என்று பகடி (கேலி) பண்ணிச் சிரித்தார். ஆனால், இந்த நிலையிலும் தமிழகத்திலுள்ள கர்நாடகத்தாருக்கு எவ்வகையிலும் துயர்தரும் செயல்களைச் செய்யக் கூடாது எனக் கூறி காவல் துறைமூலம் கன்னடியர்களுககு நல்ல பாதுகாப்புக் கொடுத்துக் காத்தார் தமிழக முதல்வர் செயலலிதா.

தமிழர்கள் அங்கு அரத்தம் சிந்தி மாய்வதையும், ஏதிலிகளாக ஆணும் பெண்ணும் கதறித் தமிழகம் போவதையும் கண்ட சமாசவாதி சனதாக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் தேவகௌடா, 'கர்நாடக முதல்வர் பங்காரப்பாவே இந்த இழி நிலைக்குக் கரணியம்; எனவே அவரை மக்கள் முன் நிறுத்தி உசாவ (விசாரிக்க) வேண்டும்' எனக் கூறிக் கண்டித்தார். அங்குக் காவலர்களே தமிழர்களை அடித்து நொறுக்கி விரட்டியுள்ளனர். இந்தக் கொடுமையை எப்படித் தாங்கிக் கொள்ள முடியும்? இதுவா இந்தியாவின் ஒருமைப்பாடு? ஒற்றுமை? ஒருமை பேசும் நடுவணரசு தன்னிடமுள்ள படைத்துறையை அனுப்பித் தமிழர்களைக் காப்பதற்குத் தவறி விட்டது. ஏனென்றால் கர்நாடகத்தில் அடிபட்டுச் சாவது தமிழர்கள். அதனால் வாய் ஊமையாகி விட்டது நரசிம்மராவுக்கு. தமிழர்களைக்காக்க மனமற்ற நரசிம்மம் இரு மாநில முதலமைச்சர்களையும் பேச்சுரைக்கு அழைத்தார். காவிரிச் சிக்கல் தோன்றியபின் 26 முறை பலவகைப் பேச்சுரைகள் நடந்துள்ளன. பயன் இந்நாள்வரை எதுவுமில்லை.

Scanned with CamScanner

இச்சூழலில் இவ்வாண்டு தஞ்சைக் குறுவை நெல் விளைச்சலுக்கு நீர் கேட்டது தமிழ் நாடு அரசு. இப்போது இருக்கும் கர்நாடக வீரப்பமொய்லி,' தண்ணீராவது வெந்நீராவது, இப்படியெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பது தமிழ் நாட்டுக்கு அழகன்று' என்று தண்ணீர்விட மறுத்தார். உடனே தமிழ் நாடு முதலமைச்சர் காலவரையற்ற உண்ணா நோன்பை ம.கோ.இரா. கல்லறைக்கு அண்மையில் தொடங்கி இருந்தார். தமிழ்நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளும் நல்ல முயற்சி என்று பாராட்டின. ஆனால் அ'து ஒரு நாடகம் போன்று புனையப் பட்ட வேடம் போலாயிற்று. இந்த உண்ணாநோன்பால் செயலலிதாவிற்குப் போதுமான விளம்பரம் கிடைத்தது தவிர வேறு எப்பயனையும் யாரும் தரவில்லை. ஆனால் மூடத் தமிழர் இருவர், மூவர் தற்கொலை செய்து கொண்டனர். அதற்காக அவர்கள் செயலலிதாவிமிடருந்து ஆளுக்கு ஓர் இலக்கம் ஊக்கத் தொகையாகப் பணத்தைப் பெற்றுக் கொண்டனர். இவர்கள் காவிரியில் தண்ணீர் வரவில்லை என்பதற்காக உயிரை மாய்க்கவில்லை. செயலலிதாவிடமிருந்து பணம் பெறுவதற்காகத் தான் இப்படிச் செய்து கொண்டார்கள் — என்றும் சொல்லிவிட முடியாது. ஆனால் செயலலிதா உண்ணாநோன்பிருப்பது அவர்களால் பொறுத்துக் கொள்ள முடியாமல் இருந்திருக்கிறது என்பது தான் உண்மை. இ'து எவ்வளவு முட்டாள் தனம்; அறியாமை; பேதைமை!

இவ்வுண்ணா நோன்பை நிறுத்தும்படி நடுவண் அரசு நீர்வளத்துறை அமைச்சர் வி.சி.சுக்லா கர்நாடகத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் வந்து முதல் அமைச்சர்களைச் சந்தித்து, 'நடுவர் மன்ற இடைக் காலத் தீர்வை நடை முறைப்படுத்துவதற்காக இருகண்காணிப்புக் குழுக்களை அமைக்கிறேம்' எனக் கூறி, உண்ணா நோன்பை முடித்துக் கொள்ளக் கேட்டுக் கொண்டு காக்கை அப்பத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிப்போய் விட்டது என்று சொல்லி விட்டுப் போவது போல் போய்விட்டார். இது பெரிய ஏமாற்றம் என்று உண்ணாநோன்பிருந்த தமிழ்நாடு முதலமைச்சரே சான்று கூறிவிட்டார்.

இப்படித்தான் ஒட்டுமொத்தமாகத் தமிழ் நாட்டு அரசியல் கட்சிகளும், நடுவணரசும் தமிழ் நாட்டை வஞ்சித்துக் கொண்டும், ஏமாற்றிக் கொண்டும் இருக்கின்றன. ஆக செயலலிதாவின் உண்ணா நோனபால் மக்கள் போக்குவரத்தில்லாமல் அல்லற்பட்டதும், அமைச்சர்கள் புல் தரையில் முதல்வருக்குக் காவலாகப் படுத்திருந்ததும், உயிரை விட்டதற்காகச் சிலருக்குப் பரிசு கிடைத்ததும், உண்ணா நோன்பிற்கு அரசு பணம் செலவானதும் தாம் மிச்சம்! மற்றபடி ஒரு சிறு பயனுமில்லை. இன்றும் அல்லது இனியும் ஏதாவது பயன் கிடைக்கும் சூழ்நிலைகளுமில்லை.

நாட்டில் நடக்கும் சட்ட ஒழுங்கைக் கெடாமல் பாதுகாக்கும் உச்ச நெறி மன்றம் அமைத்த நடுவர் குழு காவிரி பாய் நிலைகளை நேரில்கண்டு நிலைகளை அறிவியல்,ஞாயம் ஆகிய முறைப்படி ஆய்ந்து கூறிய தீர்ப்புக்குப் பின்பும்,தமிழ் நாட்டு அரசியற் தலைவர்கள், உழவியல் அறிஞர்கள், சட்ட அறிஞர்கள் போன்றோர் தமிழகத்திற்கு நீர்விடுவது ஞாயமே எனக் கூறியபின்பும், பாராளுமன்றத்திலேயே சிக்கலை அறமன்றக் கூற்றுப்படி நடுவண் அரசு இருமாநிலங்களுக்கும் ஞாயம் வழங்க முன் வர வேண்டுமென உறுப்பினர்கள் பேசிய ஞாயத்தைக் கேட்டபின்பும், இந்திய அரசியல் சட்டத்தை மீறி அறமன்றத் தீர்ப்பை இழிவுபடுத்திக் கொண்டு கர்நாடகம் இருக்கிறது என்றால், அவ்வரசின் மீது எவ்வகை நடவடிக்கையும் எடுக்க மறுத்து வரும் நடுவணரசை இனியும் தமிழ்நாடு நம்பத்தான் வேண்டுமா?

கர்நாடக மாநில அனைத்துக் கட்சிகளும் ஒன்றுசேர்ந்து தமிழ்நாட்டுக்குத் தண்ணீர்விட நடுவணரசு ஆணையிட்டால் நாடு தன்னாட்சி உரிமையைக்கோரும் என்று குரல் கொடுப்பது போல, தமிழ்நாட்டு அனைத்துக் கட்சிகளும் ஒன்றிணைந்து தமிழ்நாடு தமிழர்க்கே என்று குரல் எழுப்பவேண்டும். வி.பி.சிங் தலைமை அமைச்சராக இருக்கும்போதுதான் நடுவர் மன்றம் அமைக்கப் பட்டது. கர்நாடகத்தில் அக்கட்சியினரே நடுவ மன்றக் குழுவின் ஆணையை இழிவுசெய்து கட்சிக் கட்டுப்பாட்டை மீறித் தமிழ்நாட்டிற்குத் தண்ணீர் கொடுக்கக் கூடாது எனக் கூறும்போது, இங்குள்ள இந்திரா பேராயக்கட்சியினர் ஏன் நடுவணரசை எதிர்த்துக் குரல் கொடுக்கக்கூடாது?

மீண்டும் பேச்சுரைக்குக் கர்நாடகம் அழைக்கிறது. ஆனால் கர்நாடகம் என்றும் வளையாது; காவிரிச்சிக்கலும் தொலையாது. தமிழ்நாடு தனியாகப் பிரியும்வரை ஓயாது இந்தச் சிக்கல்! O

சொல்லாய்வறிஞர் அருளி அவர்களின
அரிய புதிய ஆராய்ச்சிப் படைப்பு!

தென்மொழியின் தொண்டு!

(இதன் தொடக்கக்காலம் பற்றிய ஒரு மேற்பார்வை)

(தென்மொழி தொடங்கிய 1959-ஆம் ஆண்டில் ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தம் இருபத்தாறு அகவையில் இருந்த இளமைத் தோற்றப்படம் அட்டையில் மிளிர்கிறது.)

பக்கங்கள் : 90 விலை : உருவா 12

(அஞ்சல் செலவு தனி)

அறிவன் பதிப்பகம்

'தனித்தமிழ்மனை' தமிழூர்,
காளிக்கோயில் தெரு, புதுவை-605009.

Scanned with CamScanner

விடுதலைப் புலிகளின் ஆற்றலை சிங்களப் படையினர் ஒரு போதும் பெறமுடியாது.

"விடுதலைப் புலிகள் ஓரிடத்தில் மட்டுமன்று, இலங்கை முழுவதிலும் நின்று சண்டை பிடிக்கக் கூடிய வலிவுள்ளவர்கள், அவர்களின் வலிவை சிங்களப் படையினர் ஒரு போதும் பெற முடியாது" என்கிறார் சிங்கள முன்னணி அரசியல் திறனாய்வாளரான காலிங்கசே. 18-10-92-இல் "ராவய" செய்தியிதழில் அவர் எழுதிய கட்டுரையை இங்கு தருகிறோம்.

வடக்கு கிழக்குப் போரில் சிறிலங்கா அரசு மிகவும் பின்னடைவையும், தடுமாற்றத்தையும் கண்டுள்ளதை மிகவும் தெளிவாகக் காண முடிகிறது. இப் போரில் தம் எட்டு படை வீரர்கள் உயிரிழக்க வேண்டிய நிலை உருவாகியுள்ளதுடன் படையை விட்டு ஓடுபவர்களின் எண்ணிக்கையும் இரட்டிப்பாகியுள்ளது. கடந்த (92) ஆகத்து 8-இல் படைத்துறை உயரதிகாரிகள் ஒன்பது பேரின் உயிரிழப்பைத் தொடர்ந்து இந்நிலை ஏற்பட்டுள்ளது. இவ் அதிகாரிகளின் உயிரிழப்பின் பின்னர் மட்டும் ஓடிய படை வீரரின் எண்ணிக்கை 875 ஆகவுள்ளது. இதுவரை காலமும் படைவீரர் மட்டுமே ஓடினர். ஆனால் இப்போது கடற்படையினரும் ஓடத்தொடங்கியுள்ளனர்.

ஆகத்து எட்டில் ஏற்பட்ட ஒன்பது கடற்படை உயரதிகாரிகளின் உயிரிழப்பைத் தொடர்ந்தே இந் நிலை உருவாகியுள்ளது. தற்போது படைத்துறையில் உயிரிழந்தவர்களின் இடத்தை நிரப்புவதற்குப் புதியவர்களைத் திரட்ட முடியாத நிலை அரசிற்கு ஏற்பட்டுள்ளது.

படைத்துறை உயரதிகாரிகளின் இழப்பு வடக்கு—கிழக்குப் போரின் அடித்தளத்தையே அதிர வைத்துள்ளது. தொடர்ந்து படை வீரரைக் கொண்டு செலுத்த முடியாத ஒரு நிலையில் தற்போது தலைவர்கள் தள்ளாடுகிறார்கள். அத்துடன் அதிகாரிகள் நடுவிலும் வீரர்களிடமும் மனத்தளர்வு காணப்படுகிறது.

அரசுடன் ஏனைய தமிழ்க் குழுக்கள் இருந்த போதும் மக்கள் புலிகளுடன் இணைந்திருப்பதால் புலிகளை வெற்றி கொள்வதோ அல்லது அழிப்பதோ கடினமாகும். மேலும் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போரில் போதிய போர்த் தளவாடங்கள் இன்மை படையினர் எதிர் கொள்ளும் மூகாமைச் சிக்கலாகவுள்ளது. படைத்துறை நடவடிக்கையின் போது வானூர்திப் படையின் உதவி தேவையாகவுள்ளது. ஆனால் அந்த நேரத்தில் வானூர்தி மூலம் உதவிகள் வழங்க முடியாத நிலையில் வான்படை உள்ளது. அதே வேளை சரியான இலக்கைப் பார்த்துக் குண்டுபோடும் போது புலிகளின் எதிர்த்தாக்குதலுக்கு வானூர்தி இலக்காகக் கூடும். அவ்வாறு எதிர்ப்புத் தாக்குதலுக்கு இலக்காகாது தாக்குதலை நடத்த வேண்டுமாயின் மிக உயரத்திலிருந்து குண்டுகளை வீச வேண்டும். அவ்வாறு வீசும்போது இலக்கைப் பார்த்துக் குண்டு வீசமுடியாது. வானூர்தி தாக்குதல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது மணல், சதுப்பு, நிலங்களில் செலுத்தக் கூடிய போர்த் தாங்கிகளும் ஏனைய போர்க் கருவிகளும் தேவை. இவற்றை மிக உயர்ந்த விலை கொடுத்து வாங்க வேண்டியுள்ளது. அவ்வாறு வாங்கி அரசு இவற்றைப் பயன்படுத்தும் போது அவை புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகி சேதமாக்கப் படுகின்றன. இவ் விழப்புகளினால் படைத்துறைச் செலவு பன்மடங்கு அதிகரித்துக் காணப்படுகிறது. போர் நடைபெறும் போது விட்டுக் கொடுத்துவிட்டுப் பின்னர் தமக்கு வாய்ப்பான இடத்தில் வைத்துப் புலிகள் தாக்குகின்றனர். புலிகளின் இப்போர்த் தந்திரத்தினால் உயரதிகாரிகள் உட்பட போர் வீரர்கள் நடுவிலும் பெரும் அச்சம் ஏற்பட்டுள்ளதைக் காண முடிகிறது.

இதனால் போரில் முன்னேறிச் செல்லும் படைத்துறையினர் ஒரு கட்டத்தில் அச்சம் கொண்டு பின்வாங்க வேண்டிய ஓர் இக்கட்டான நிலைக்குப் புலிகளின் இப் போர்த் தந்திரம் தள்ளியுள்ளது. இப்படியான நிலைக்குப் படைத்துறை தள்ளப்பட்டுள்ளதால் புலிகள் மிகவும் துல்லியமாகவும், விரைவாகவும் தமது வெற்றியை ஈட்டக் கூடியதாகவுள்ளனர்.

போர் நடவடிக்கைகளின் போது முப்படைகளிடையேயும், படைத்துறை அதிகாரிகளிடையேயும் பொதுவான ஒத்துழைப்பு இல்லாமையைத் தெளிவாகக் காணமுடிகிறது. அரசிடமும், அரசியல் தலைவர்களிடமும், படைத்துறை உயரதிகாரிகளிடையேயும் கருத்து வேறுபாடுகள், அரசியல் வேறுபாடுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. பதவியுயர்வுகள் வழங்கும் போது அவை அதிகாரிகளின் அறிந்த தெரிந்தவர்களுக்கே வழங்கப் படுகின்றன. இது போன்ற முறைகேடான நடவடிக்கைகள் படைத்துறையினரின் மன நிலையை பெரிதும் தாக்கியுள்ளன. போரைப் பற்றிய பட்டறிவும் திறமையும் உள்ளவர்கள் பல்வேறு காரணங்களை முன்னிட்டு ஓய்வு பெறுவதால் படையணிகளை வடிவமைத்துப் போரில் ஈடுபடுத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

கூட்டுப்படைத் தலைமையகம் குறிப்பிட்ட காலத்தில் நடைபெற்ற போர் நடவடிக்கை.

Scanned with CamScanner

களுடன் தலைமையான தொடர்பைக் கொண்டிருந்தது.

முன்னாள் படைத் தளபதி ஹமில்டன் வனசிங்காவை ஜே.ஓ.சி பொறுப்பாளராக அமர்த்தியது. அங்கிருந்த உயர் அதிகாரிகளுக்குச் சற்று அவமதிப்பை ஏற்படுத்தியுள்ளது.—இதனை இன்று அரசியல்காரர்கள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இப்படியான சிக்கல்களைக் கண்டும் காணாததும் போலிருக்காது இவற்றைப் பெரிதுபடுத்தவும் இவர்கள் முனைகின்றார்கள். மீண்டும் கூட்டப்படைத் தலைமையகத்திடம் போர் நடவடிக்கைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது கூட்டுப் படைத் தலைமையின் கீழ் ஹமில்டன் வனசிங்க ஏனைய படைத்துறை உயரதிகாரிகளுடன் போரை முன்னெடுக்க முடியாது தடுமாறுகின்றனர். இவர் தற்பொழுது படைத்துறையினரிடையே ஏற்பட்டுள்ள தொய்வைச் சீர்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். இதற்கு அங்குள்ள இரண்டு முகாமை அதிகாரிகளின் உதவி அவருக்குத் தேவையாக இருப்பது தெளிவாகின்றது.

படைத்துறை மட்டத்தில் இப்படியான பல சிக்கல்கள் காணப்படுகின்ற அதே வேளை, விடுதலைப் புலிகளுக்கு எதிராகப் போரிடுவதற்குத் திறமையான திட்டத்தைத் தீட்டித் தாக்குதல்களையும் நடத்த வேண்டியுமுள்ளது;

படைத்துறையினரின் தொய்வுகளை நீக்கிப் புலிகளுடனான போராட்டத்திற்கு அணியப்படுத்துவது உடனடி வாய்ப்பற்றது. விடுதலைப் புலிகளிடம் வானூர்தி எதிர்ப்புக் கருவிகள் இருப்பதால் அவர்களுக்கு எதிரான வான் தாக்குதல்களைக் கூட உரிமையாகச் செய்ய முடியாத நிலை வான் படைக்கு ஏற்பட்டுள்ளது. 23 எம்.எம் வகை வானூர்தி எதிர்ப்புக் கருவி மூன்று விடுதலைப்புலிகளிடம் இருப்பதாக அரசின் உளவுப்படை தெரிவிக்கின்றது. வானூர்திப் படையின் நடமாட்டம் கூட விடுதலைப் புலிகளிடம் இருக்கும் கருவிகளால் மட்டுப்படுத்தப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் ஓரிடத்தில் மட்டுமன்று. இலங்கை முழுவதும் நின்று சண்டை பிடிக்கக் கூடிய வலிவுள்ளவர்கள். அவர்களின் வலிவை நாம் ஒருபோதும் பெறமுடியாது என்பது மட்டும் உறுதி. எனவே விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதே நாட்டின் ஒற்றை ஆட்சிக்குப் பாதுகாப்பாக அமையும். எனவே இது தொடர்பாக விடுதலைப்புலிகளுடன், எந்த வகைத் தாழ்த்தமுமின்றி அரசு பேச்சுவார்த்தை நடத்துவதே எல்லார்க்கும் நன்மை பயக்கும்.

இது மிகவும் கடினமானதும் சிக்கல் நிறைந்ததாகவும் இருந்தபோதும் அரசியல் தீர்வே சிறந்தது. இதில் அரசிற்கு மட்டுமன்று. எதிர்க் கட்சிகளுக்கும் பெரும் பொறுப்பு உண்டு. இது வரை இவர்கள் ஒருவரை ஒருவர் சாடி வந்தார்கள். இனியாவது இக் கட்சிகள் இனச் சிக்கலைத் தீர்க்கப் பாடுபட வேண்டும்.

ஆட்சிப் பீடத்தில் இருப்பவர்களும், ஆட்சிக்கு வர முயற்சிப்பவர்களும் இதைப் புரிந்துணர்வுடன் அரசு—எதிர்க்கட்சிகள் சிக்கலென்று காலம் தாழ்த்தாது மிக முகாமையானதெனக் கருதி ஒற்றை இலங்கையில் மக்கள் வாழ வழியமைக்க வேண்டும்.

— நன்றி: **'உலகத்தமிழர்' (1-12-92)**

(5-ஆம் பக்கத் தொடர்ச்சி)

— தடம் புரண்ட தமிழகத்திற்கு இவை சான்றுகள்!

— 'இந்திய'தேசிய நீரோட்டத்தில் முக்குளித்து, 'திராவிட' அருவிகளில் நீராடி, தமிழ்நாட்டின் ஆறுகளை அடைத்து,வயல்களைக் காயவிட்டவர்கள் நம் தலைவர்கள்; இருக்கும் சொத்தைக் காத்துக் கொள்ளவும், புதியதாக நிரப்பிக் கொள்ளவும் 'விலாங்கு' வடிவம் கொண்டு விட்டவர்கள் நம் தலைவர்கள்.

— குமுக உறவுகளின் எல்லைக் கோடுகள் தள்ளி வரையப்படுகின்றனவே யொழிய, முற்றிலும் அழிக்கப்படவில்லை. குமுக ஒடுக்கு முறை புதிய தோற்றம் பெறுகின்றது! 'பார்ப்பனியம்' புதிய வடிவத்தில் வலம் வருகின்றது!

அன்றைய நெடுஞ்செழியன்கள் ஆரியப்படை கடந்தார்கள்! இன்றைய நெடுஞ்செழியன்கள் 'அவர்களின்' காலடியில் நெடுஞ்சாண் கிடையாய் கிடக்கின்றார்கள்!

அடிமைத் துயிலில் ஆழ்ந்து கிடக்கும் அரிமாத் தமிழனை, திசையறியாது திண்டாடும் திண்தோர் தமிழனை—தட்டி எழுப்பிய தமிழினத் தலைவர்கள் எல்லாம் 'தடா'ச் சிறையில் தள்ளப்பட்டிருக்கும் போது, நாம் எப்படி அமைதியாய் இருக்க முடியும்? தமிழக மக்களே!

நம் தாய்த் தமிழ் மண்ணிலேயே கந்தலாடையோடும், காந்துகின்ற வயிறோடும், சாய்க்கடை ஓரத்தில் தள்ளப்பட்ட—நாம் எப்படி அமைதியாய் இருக்க முடியும்? 'அவர்களை' எப்படி 'அமைதிப் பூங்காவில் அமைதியாய் உலவவிட முடியும்? O

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக் கொண்டு வருமாறு கேட்டு கொள்கிறோம். **அமைச்சர்.**

TN/MS(C)657

இசுலாமியத் தமிழர் பேரவை.

(ஓர் அறிவிப்பு!)

தமிழகத்திலுள்ள, தமிழரைத் தாய்மொழியாகக் கொண்ட இசுலாமியர்கள் தாங்கள் தமிழினத்தைச் சார்ந்த தமிழர்கள்தாம் என்பதை வரலாற்றடிப்படையில் உணர்த்தவும், பிறப்பிலிருந்து இறப்பு வரை தங்களது தாய்மொழியாகிய தமிழிலேயே எல்லா நிகழ்ச்சிகளையும் நடத்தவும், தாங்கள் அரபு நாட்டிலிருந்து வந்தவர்கள் அல்லர், தாங்கள் இந்தத் தமிழ் மண்ணின் மைந்தர்கள்தாம் என்பதை அறிவிக்கவும், மிக விரைவாக ஓர் அமைப்பு தேவைப் படுகிறது.

அந்த அமைப்பின் வாயிலாகத் தனித்தமிழ் நாட்டுக் கோரிக்கைக்கு வலுச் சேர்க்கவும் வழி காணவும், இவற்றுக்கு எதிராக நிற்கும் பார்ப்பனர்களின் பொய்க் கருத்துப் பரப்புதல்களை முறியடிக்கவும் வேண்டியுள்ளது.

எனவே, இவ்வமைப்பின் தேவையையும் காலத்தின் கட்டாயத்தையும் உணரும் அன்பர்கள் ஒன்று கூடி அவ்வமைப்புக்கான முயற்சிகளைப் பற்றிக் கலந்துரையாடல் வழி செயல் திட்டங்கள் வகுத்துக் கடமையாற்ற வேண்டியும் உள்ளது.

ஆகவே இவ்வுணர்வுள்ள அன்பர்கள் இவ் வறிக்கையினைக் கண்ணுற்றதும், தங்கள் இசைவுகளையும் கருத்துகளையும் உடனே தெரிவித்துக் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

இங்ஙனம்
ஓர் இசுலாமியத் தமிழன்
சா.முகமது அலி சின்னு
15A, 3-ஆவது தெரு,
நேதாசி நகர்,
தண்டையார்ப்பேட்டை, சென்னை-81

O

O தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் கணிசமான போராளிகள் பெண்கள். இவர்களை ஏன் போராளிகளாக விடுதலைப் புலிகள் ஆக்கினார்கள் என்றால், 'தமிழீழத்தின் மொத்த மக்கள் தொகையில் ஆண்களை விடப் பெண்களே அதிகம். எனவே தமிழீழத்தை மீட்டெடுக்க வேண்டிய கடமை தமிழீழப் பெண்களுக்கே அதிகமுண்டு, என்று கூறுகின்றனர்.

O ஏறத்தாழ 450 ஆண்டுகளுக்கு முன் அயோத்தியில் கட்டப் பட்டிருந்த வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மசூதி 1992 திசம்பர் 6-ஆம் பக்கல் இந்து மத வெறியர்களால் தகர்க்கப்பட்டு அழிக்கப் பட்டது.

O கடந்த சனவரி மாதம் பம்பாயில் மத வெறியர்களால் நேர்ந்த கலவரத்தால் மட்டும் உரு 1000 கோடிக்கும் மேல் இழப்பு ஏற்பட்டது.

சென்ற இதழில் ஒரு திருத்தம்!

சென்ற 'தமிழ்நிலம்'—இதழ் எண். 165-இல் 2-ஆம் பக்கம், மேலிருந்து கீழ் 25-ஆவது வரியில் உள்ள மோகன முரளி என்பதை ஜீவாகிரிதரன் என்று திருத்திப் படிக்கவும்.

உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

சிந்தனைக்கு-81

அரசு மக்களுக்குத் துணையாகச் செயல்பட வேண்டும்; அது எதிராகச் செயல் பட்டால் மக்களைக் காப்பதற்கு யாரும் இல்லை.

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்: 166

அனுப்புதல்:	பெறுநர்: நூல் அஞ்சல்
தமிழ்நிலம் 5, அருணாசலத் தெரு திருவல்லிக்கேணி, சென்னை-5 தொலைபேசி எண்: 847829	திரு / திருவாட்டி

உறுப்பினர்:

தனி இதழ் விலை	உரு 1-50
ஆண்டுக் கட்டணம்	உரு 36.00
அரையாண்டுக் கட்டணம்	உரு 18-00

ஆசிரியரும், வெளியிடுபவரும்: பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம், 5, அருணாசலத் தெரு, சென்னை-5